# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 11**

**NOVEMBER 2023 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கடந்த மாதங்களில் நடந்த அனைத்து கூட்டங்களும் மிக ஆசீர்வாதமாக அமைந்தன. எனக்கு பின்னால் உங்கள் ஜெபம் என்னை மிகவும் பெலப்படுத்தியது. ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

கடந்த ஜுலை மாதத்தில் நடந்த சகோ. **பால் தினகரனின்** மகள் **திருமணத்தைப்பற்றி** உங்கள் அபிப்ராயத்தை இன்னும் ஏன் எழுதாமலிருக்கிறீர்கள் என்று வாசகர்கள் ஏராளமானோர் மிகவும் என்னை கட்டாயப்படுத்தி கொண்டிருந்தார்கள். ஏராளமானவர்கள் Youtubeபிலும் பத்திரிக்கையிலும் அந்த திருமணத்தைப்பற்றி விதவிதமான **விமர்சனங்களை** அள்ளிதெளித்து கொண்டிருக்கும்போது என் வாயை ஏன் கிளருகிறீர்கள்? என்றாலும் வேத புத்தகத்தின் அடிப்படையில் அந்த **சாட்சியில்லா திருமணத்தைப்** பற்றி சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

## ஆடம்பரம்

### இயேசு அழைக்கிறார் குடும்ப கலியாணம்

ஆவிக்குறிய கிறிஸ்தவர்களுக்கும் பெயர் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள

வித்தியாசங்களை அவரவர்களின் வீட்டில் நடக்கும் **மரணம், திருமணம்** மற்ற விசேஷங்களிலும் காணலாம்.



அந்த வகையில் **இயேசு அழைக்கிறார்** குடும்பம் முழுவதும் விதவிதமான ஊழியத்தில் ஈடுப்படுகிறார்கள். மற்றவர்களுக்கு உபதேசிக்கிறார்கள். ஆனால் சாட்சியில்லையே !

YouTubeல் இவர்கள் மகளின் நிச்சயம் நடந்த காட்சியை காட்டினார்கள். எனக்கு மொபைலில் YouTubeல் உள்ளவைகளை பார்க்கத் தெரியாது. மற்றவர்கள் இதை பாருங்கள் என்று பால் தினகரனின் இரண்டாவது மகள் (Stella Romola) ஸ்டெல்லா ரெமோலாவின் நிச்சயதார்த்த நிகழ்ச்சிகளை காட்டினார்கள். அப்படித்தான் அதை காண நேர்ந்தது. அதை கண்டபோது **வட இந்திய சூப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன்** தன் மகன் நிச்சயத்துக்கு வரப்போகும் மருமகள் **உலக அழகி** என்ற பட்டம் வாங்கிய **ஐஸ்வர்யா ராய்க்கு** நிச்சய நாளுக்கென்று வாங்கிக்கொடுத்த **புடவையை** குறித்து தமிழ்நாட்டு தினசரி செய்தி தாள்களில் இப்படி எழுதியிருந்தார்கள். அமிதாப்பச்சன் குடும்பம் பம்பாயிலிருந்து தங்க கட்டிகளை **காஞ்சிபுரம்** என்ற ஊரில் பட்டு புடவைகளை தயாரிக்கும் நெசவாளியிடம் கொடுத்து புடவை முழுவதும் தங்க சரிகையால் நெய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பத்திரிக்கையில் பேட்டி கொடுக்கும்போது அந்த தங்க சரிகை புடவையின் விலை **40 லட்சங்கள்** என்று பெறுமையாக கூறினார்.

**நிச்சயதார்த்தப் புடவையே** 40 லட்சம் என்றால் கலியாணத்துக்கு எவ்வளவு செலவு செய்திருப்பார். இதைத்தான் **ஆடம்பர கலியாணம்** என்பார்கள். என்னத்தான் பெரும் கோடீஸ்வரராக, பணக்காரராக இருந்தாலும் சில நிமிட கலியாண நிகழ்ச்சிக்கு பல கோடிகளை செலவழிப்பார்களா? இதைத்தான் ஆடம்பரம் என்று கூறுவார்கள்

இதைபோலவே பால் தினகரனின் இரண்டாவது **மகள்** நிச்சயத்துக்கு குடும்பமே உடுத்திய உடைகளின் **விலை, அலங்காரத்துக்கு** செய்த செலவு, **டவுரிக்கு** கொடுத்த **ரொக்கம், தங்க நகைகளின் கணக்கு, விருந்தின்** கணக்கு இவைகளை தோராயமாக கணக்கிட்ட ஒரு ஆடிட்டர் கூறியது. நிச்சயமாக **பலகோடிகளை** கலியாணத்துக்கு முன் நிச்சயத்துக்கு மட்டுமே செலவழித்திருப்பார்கள் என்றார்.

சில மாதங்களுக்கு முன்தான் **கணக்கில் வராத பணமாக 127 கோடிகள்** காருண்யா **கெஸ்ட் ஹவுஸ்ஸில்** வருமான வரி துறையினர் **கையும் களவுமாக** பிடித்தனர். அதோடு மக்கள் **கொடுத்த காணிக்கைகளை தங்க கட்டிகளாக** மாற்றி வைத்திருந்ததையும் அமலாக்க துறையினர் பிடித்தார்கள்.

அதிலிருந்து ஜெயிலுக்கு போகாமல் வெளிவர **பல கோடிகளை அபராத**

**தொகையாக** கொடுத்து தப்பித்தார்கள் என்ற செய்திகள் மக்கள் மனதிலிருந்து இன்னும் நீங்காத இந்த சூழ்நிலையில்தான் மூத்த மகளின் சாட்சியில்லா திருமணத்தால் அவளை **ஒதுக்கிவைத்தார்கள்.** சிறிய மகளும் **அவளைப்போல்** யாருடனாவது **ஓடிப்போவதற்குமுன்** அவள் காதலித்த பையனையே தாமதிக்காமல் கட்டி வைத்தார்கள்.

இப்படி பல கோடிகள் அபராத தொகை செலுத்தி விசாரணைக்கும் வீட்டுக்குமாக ஓடிக்கொண்டிருக்கும் வேளையில் இவ்வளவு பிரம்மாண்டமான ஆடம்பரமாக திருமணம் செய்ய வேண்டுமா ?

- ☐ பல கோடிகளுக்கு அதிபதியாக ஒரு கட்சியின் தலைவி **திருமதி சோனியா காந்தி,** தன் மகள் **பிரியங்கா காந்தியின்** திருமணத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் தெரியுமா ? 13லிருந்து 17 பேர்கள் தான்.அனைத்து **உலக தலைவர்களும்** கலந்து கொள்ள வேண்டிய திருமணத்துக்கு எத்தனை சிக்கனமாக **மகள் திருமணத்தை** நடத்தி வைத்தார்கள். நல்ல முன் மாதிரி.

ஆனால் **இயேசு அழைக்கிறார்** குடும்பத்தில் ஒருவராவது மாத சம்பளம் வாங்கும் வேலை ஏதும் செய்யாதவர்கள். வேளை செய்திருந்தால் எங்கள் **வருமானத்தில்** இந்த திருமணத்தை நடத்தினோம் என்று கூறலாம் குடும்பமே **மக்கள் கொடுக்கும் காணிக்கையில்** தான் இந்த ஆடம்பர வாழ்க்கையும், ஆடம்பர **திருமணமும்** நடைபெற்றது.

- ☐ இந்த நிலையில் தான் **பால் தினகரனின்** மனைவி **இவாஞ்ஜலின்** அம்மையார் பெண்கள் கூட்டத்தில் **எல்லாரும் இயேசு அழைக்கிறார்** ஊழியத்துக்கு காணிக்கை அனுப்பாதீர்கள். **அது பணக்கார ஊழியம்** என்று **மிக தவறாக** எங்களை **நினைக்கிறார்கள்.** இன்று **உங்களுக்கு** முன்னும் **கர்த்தருக்கு முன்பாகவும்** கூறுகிறேன். **எங்கள் பேங்க்கில் எங்கள் கணக்கில்** எவ்வளவு ரூபாய் பேலன்ஸ் இருக்கிறது தெரியுமா? வெறும் **சைபர் பேலன்ஸ்தான்** இருக்கிறது. யார் வேண்டுமானாலும் எங்கள் **வங்கி பாஸ்புக்கை** வந்து பார்க்கலாம் என்று ஒரு புளுகு செய்தி கூறினார் பாருங்கள். கூட்டத்தில் பங்கெடுத்த அத்தனை பெண்களும் அதிர்ந்து போனார்கள். இப்படியும் **அழுதுகொண்டே பொய் பேசுவார்களா?**



**பொய்கள்** No 1: வங்கியில் எப்போதும் **O பேலண்ஸ்** வைக்க கூடாது குறைந்த பட்சம் 4000 ரூபாயாவது இருக்க வேண்டும் என்பது சட்டம்

**பொய்கள்** No, 2: இந்த அம்மையாருக்கு மட்டும் மொத்தம் **நான்கு பேங்கில்** கணக்கு இருக்கிறது. **பிள்ளைகள் பெயரில்** பல வங்கிகளில் பணம் இருக்கிறது.

சென்னையில் **பாரிஸ் கார்னரில்** உள்ள **கட்டிடத்தின் வாடகை,** மேலும் சென்னையில் பல்வேறு இடங்களில் பல்வேறு **அலுவலகங்கள்** செயல்படும் **கட்டிடங்களிலிருந்து** பல கோடி ரூபாய் வாடகைகள் வருகிறது. மேலும் இந்தியாவில் மட்டும் **ஜெப கோபுரம்** என்ற பெயரில் வாங்கி இருக்கும் **கட்டிடத்தில் ஜெபிக்கும் இடம் தவிர** மற்ற அறைகள் **வீட்டின் மற்ற பாகங்களிருந்தெல்லாம்** ஏராளமான வாடகை பணம் குவிகிறது. நான் இப்போது எழுதியது **இந்தியாவில் மட்டும்** இந்த கணக்கு. **இஸ்ரேலில்** பல அடுக்கு **ஜெப கோபுரத்தின்** வாடகை, விவரம் பல **பில்லியன்களாகும்** என்கிறார்கள்.

இத்தனை வருமானம் வைத்துள்ள **இவாஞ்ஜலின்** குடும்பம் கொழுத்திருகக அம்மைார் **தன் பேங்கில்** ஒரு பைசா **கூட இல்லை** என்று மிக **துணிகர பொய்** கூறி அது வீடியோவில் பதிவாகி இந்தியா முழுவதும் வைரலாக பரவியுள்ளது.

## அனனியா – சப்பிராள்

மேலே குறிப்பிட்ட அன்னியா – சப்பிராள் போல **பொய் பேசுவதில் கணவனும் – மனைவியும்** ஒருமனம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

## கணவன் பால் தினகரனின் பொய்

பால் தினகரன் தன் தந்தையின் சவப் பெட்டிக்கு அருகில் அமர்ந்து அவர் மைக்கில் பேசியதாவது : சற்று நேரத்துக்குமுன் என் ஆண்டவரிடம் கேட்டேன். அப்பாவின் அடக்க ஆராதனைக்கு ஆயிரக்கணக்கானவர்கள் வருவார்களே, அத்தனை பேர்களையும் உபசரிக்க பணத்துக்கு நான் எங்கே போவேன். என்னிடம் பணம் ஒன்றும் இல்லையே என்று கதறினேன்.. இவ்வாறு அவர் பேசியவுடன் மரித்த DGS தினகரன் சரீரத்தை பார்க்க வரிசையில் நின்றவர்கள் அவசர அவசரமாக தன் பாக்கெட்டை தேடி பணத்தை எடுத்து **கல்யாணத்துக்கு மொய்** கொடுப்பார்களே அதைப்போல வரிசையில் வந்த ஒவ்வொருவரும் பால் தினகரன் கையில் பணத்தை தினித்து ஆறுதல் கூறி சென்றார்கள். பால் தினகரனின் பாக்கெட் நிரம்பியபின் வரிசையில் வருபவர்கள் கொடுக்கும் பணத்தை பின்னால் உட்கார்ந்தவரிடம் கொடுக்கத் தொடங்கினார். அவர்கள் அதை பெரிய பையில் நிரப்பினார்கள். சிலர் காசோலையாகவும், பணமாகவும் கொடுத்தார்கள். இப்படி சேர்ந்த பணம் கோடிக்கணக்கில் சேர்ந்திருக்க வேண்டும். காருண்யா யுனிவர்சிட்டியில் கோடிக் கணக்கில் **பணம் புரளும்** அந்த ஸ்தாபனத்தில் அப்பாவின் உடலை அடக்கம் செய்ய பணம் இல்லை என்றார்.

பணம் இல்லை என்று அவர் அழுதது எத்தனை பெரிய பொய். பால் தினகரனிடம் அப்பாவின் சவ அடக்கத்திற்கு அவர் பணம் இல்லை என்று கூறுயதை வாசகர்கள் நம்புகிறீர்களா ! நான் இப்போது கூறியது அத்தனயும் பல கோனங்களில் படம் எடுத்த வீடியோவே சாட்சி. பண விஷயத்தில் கணவன் பால்தினகரன் – மனைவி இவன்ஜிலினும் அனனியா – சப்பிராள் போல பொய் பேசியதை ஆவியானவர் பார்த்துக்கொண்டுதானே இருந்தார்.

(அப்.5:10) அனனியா – சப்பிராள் தம்பதி பொய் பேசின அந்த நிமிடமே அவர்களுக்கு கர்த்தர் மரண தண்டனை கொடுத்து இருவரின் சடலங்களையும் இழுத்துக்கொண்டுபோய் அப்புறப்படுதினார்களே.. ஆனால் பால் தினகரன் தம்பதிகள் இரண்டு பேருக்கும் தண்டனை இன்னும் வரவில்லை. ஆனால் தண்டனை நிச்சயம் உண்டு. திருமணமான மகளும் – மருமகனும் திரும்ப திரும்ப பாடியதை போலவே **நிச்சயமாகவே முடிவு உண்டு.** அந்த பாடல் இவர்களுக்காகவே பாடியது போல இருக்கிறது. வேத புஸ்தகமும் **எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு** என்று எழுதியிருக்கிறுது. இயேசு அழைக்கிறார் குடும்பம் திருந்தவே மாட்டார்களா ?

☐ **இயேசு அழைக்கிறார்** பொது கூட்டங்களை சபை மக்கள், **பிஷப்மார்** யாரும் இப்போது ஊக்குவிப்பதில்லை. அதனால் கோயமுத்தூர் **காருண்யாவில்** உள்ள **பெதஸ்தா** கட்டிடத்தில் மட்டும் இவர்கள் கூட்டங்கள் நடைபெறுகிறது.

ஊழியத்தில் வருமானம் குறைந்துவிட்டதை பால் தினகரன் அறிந்தவுடன் தன் கவனத்தை பால் தினகரன் **சீஷா** என்ற **சமூக சேவை பக்கம் திருப்பி** பெரிய விளம்பரம் கொடுக்க ஆரம்பித்துள்ளார். **ஊழியத்துக்கு** மக்கள் பணம் கொடுக்காதேபோனாலும் **சமூக சேவைக்கு பணம் கொடுப்பார்கள்** என்ற பெரிய எதிர்பார்ப்போடு **மணிப்பூரில்** சமூக சேவைகளை குறித்து பேசுகிறார். ஜாக்கிறதை. மக்கள் **இயேசு அழைக்கிறா**ர் ஊழியத்தின் மூலம் **ஏமார்ந்ததது போதும்** இனிமேலாவது ஜாக்கிறதையாக இருங்கள்.

## ஆடம்பரம்

கர்த்தருடைய பிள்ளைகள் எத்தனை பணக்காரர்களாக இருந்தாலும் குறிப்பாக ஊழியக்காரர்கள் மற்றவர்கள் பார்வையில் தங்கள் **பண பெருமையை** காட்டுவது சாட்சியில்லை. கர்த்தர் என்னை உயர்த்தினார், கர்த்தர்தான் எனக்கு உயர்ந்த பதவியையும் **வியாபாரத்தில்** பண உயர்வையும் எனக்கு தந்தார் என்றாலும், நம்முடைய உடன் விசுவாசிகளும் **உடன் ஊழியர்களும்** உலக மக்களும் உங்களை கவணிக்கிறார்கள். அவர்களுக்கு உங்கள்மேல் **பொறாமை** உண்டாகாமலும், ஏழை விசுவாசிகள் உள்ளத்தில் ஏற்றத்தாழ்வு உணர்வுகள் ஏற்பட்டு தங்களுக்குள் தாழ்வு மனப்பான்மை உண்டாகாமலும், அதன்மூலம் அவர்கள் கர்த்தரிடம் முறுமுறுக்காமல் இருக்கவும் அவர்கள்முன் எளிமையாக வாழுங்கள். உங்கள் வாழ்க்கையில் பண பெருமை உண்டானால் **உங்களால் ஜெபிக்க முடியாது.** குறிப்பாக மற்ற நலிந்துபோன ஊழியர்களுக்காக, விசுவாசிகளுக்காக ஜெபிக்க முடியாமல் போகும். தேவனுக்கும் உங்களுக்கும் பெரிய **இடைவெளி** உண்டாகிவிடும். அது உங்கள் ஆத்துமாவுக்கு ஆபத்து.

பவுல் கூறுகிறதை கவனியுங்கள் 1 கொரி 10:23ம் எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் **தகுதியாக** இராது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் எல்லாம் **பக்தி விருத்தியை** உண்டாக்காது.

இதில் **தகுதி, பக்தி விருத்தி** என்ற வார்தையை கவனியுங்கள்

**தகுதி** என்பது : நம்மை குறித்தான விஷயம். ஊழியக்காரன் அல்லது கிறிஸ்தவ விசுவாசிகளுக் கென்று ஒரு காட்சி உண்டு. உடையிலும், வாழும் விதத்திலும் ஒரு தகுதி உண்டு.

**பக்திவிருத்தி** என்பது : நம்மை காணும் மற்றவர்களுக்கான விஷயம்

நாம் வாசிக்கின்ற நிருமாயிருக்கிறோம். உலக மக்கள் **நம்மை வாசிக்கிறார்கள்.**

## கல்வாரி டெம்பிள் சபை (ஹைதராபாத்)

ஆந்திராவில் நல்ல பிரசித்திபெற்ற ஊழியரும், கலப்படமில்லாத நல்ல சுவிசேஷம் அறிவிக்கிறவருமான, லட்சக்கணக்கான அங்கத்தினர்களை கொண்ட ஆசியாவிலேயே பிரம்மாண்ட சபையை உருவாக்கினவருமான **Dr. சதீஸ்குமார்** அவர்கள் 25 நபர்களோடு சபையை ஆரம்பித்தார்,. இன்று லட்சக்கணக்கான ஆத்துமாக்களை கொண்ட சபையாக மாறியது. இவர் பணம் கேட்காமலே அவருக்கு பண மழை கொட்டியது.

அதனால் **அவர் உடையில்** மாற்றம் உண்டானது. ஒவ்வொரு வாரமும் **தகதகவென** மிளிரும் மிக **உயர்ந்த உடைகளை** விதவிதமாக உடுத்தினார். **பிரசங்க மேடையை** ஏராளமான கலர் **விளக்குகளால்** அலங்கரித்தார். தனக்கு பின்னால் தேவையற்ற **விளக்கு ஜோடனை,** அவர் **முகத்தையே மக்கள் பார்க்க முடியாமல் செய்தது.** மிக **ஆடம்பர உடைகள்**, மிக விலை **உயர்ந்த அலங்காரங்கள்** அவர் பண பெருமையைதான் பறைசாற்றின.

ஏறக்குறைய 600 உடன் ஊழியர்கள் அவர் உதவிக்காக அவர் உருவாக்கினார். சபைக்கு **வந்த மக்களுக்கு நல்ல சாப்பாடு**, **வைத்திய சேவை,** சபை மக்களை **கிராமங்களிலிருந்து** அழைத்துவர **கல்லூரி பஸ்களைபோல ஏராளமான வாகனங்கள்** அவருக்கு உண்டு, ஏழைகளுக்கு **படிக்க,** வாழ **பண உதவிகளை அள்ளி வழங்கினார்** என்றாலும் மக்கள் அவரைப்பற்றி கூறியதென்ன, அவருக்கு எத்தனை விலை உயர்ந்த **உடைகள்,** வீட்டில் இருக்கும் என்றும் அவருக்கு **எத்தனை சொத்துக்கள்இருக்கும். எங்கெல்லாம் பங்களாக்களை வாங்கி குவித்திருப்பார்.** எத்தனை **விலை உயர்ந்த கார்கள்** அவருக்கு இருக்கும் என்று **மக்கள் கற்பனை** செய்ய ஆரம்பித்ததை அவர் சபை மக்களிலிருந்து இரண்டுபேர் எழுதியதும் பேசியதும் எனக்கு அறிவிக்கப்பட்டது.

- ☐ அவர் நடத்திய TV ஊழியம் மூலம் **அவரின் ஆடையலங்காரங்களை** பிரசங்க பீடத்தின் விளக்கு அலங்காரங்களையும் கண்ட பலர் பிரசங்கம் நன்றாக இருக்கிறது. ஆனால் **ஏழை** சபை மக்கள் முன், ஏழை உடன் பாஸ்டர்கள் முன் தன்னுடைய **ஆடம்பர தோற்றத்தை** சரிபடுத்திக் கொள்ளவேண்டும் என்று **பலர் அவருக்கு கடிதம் எழுதியதாக அறிந்தேன்**. அதன்பின்தான் அனேக ஆண்டுகளுக்குபின் தான் உடுத்திய

விதவிதமாக **சர்க்கஸ்காரன்** போன்ற **ஜிகினா வேலைப்பாடுகள்** நிறைந்த **உடைகளை** கொஞ்ச கொஞ்சமாக மாற்றிக்கொண்டார். இப்போது உடைகளில் மாற்றம் ஏற்பட்டது, பிரசங்க பீடத்தில் பின்பக்கம் தொங்கின திறைகளில் மாற்றம் ஏற்பட்டது, **விதவிதமான லைட் ஜோடனைகளை** எடுத்துவிட்டார். இவைகளை குறித்து யார் மூலமாவது கர்த்தர் நிச்சயம் அவரோடு பேசியிருக்க வேண்டும்.

யாரிடமும் சபைக்காக, கட்டிடத்துக்காக இவர் கை நீட்டாமலே, யாரிடமும் கேட்காமலே கர்த்தர் லட்சங்களை அள்ளி தந்து சபை கட்டிடத்தை மிக பிரம்மாண்டமாக்கினார். ஆனால் இப்போது நடுவில் **பண தேவைகளை** கூற ஆரம்பித்தார். பண விஷயத்தில் மாற்றங்கள் புகுந்தன. எப்படியோ! இப்போதுள்ள **உடை மாற்றங்கள்** மேடை **அலங்காரங்கள்** மாறியிருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இதற்காக ஊழியக்காரன் கிழிந்த ஜிப்பா கிழிந்த பேன்ட் அணி வேண்டும் என்று நான் கூறவில்லை. ஊழியத்துக்கு தகுதியான உடைகளை உடுத்தி வந்தால் போதுமானது.

கர்த்தர் அவருக்கு **நல்ல தாலந்துகளை** கொடுத்தார். அவர் செய்தி **அனைத்து விதமான மக்களுக்கும்** ஏற்றதாக இருக்கும். தன் **சபை மக்களை** ஒரு **தகப்பனைபோல நேசிப்பார்.** அவர்களுக்கு ஆவிக்குரிய ஆகாரமும் சரீரபிரகாரம் உள்ள **ஆகாரமும்** செழுமையாக கொடுப்பார். அதனால்தான் தன் சபையைவிட்டு **ஒரு ஞாயிற்றுக்கிழமையும்** வெளிஊர் செல்லமாட்டார். எத்தனை பெரிய பிரசங்கியாராக இருந்தாலும் **தன் சபை ஆராதனையில்** தன்னை தவிர **யாரையும் பிரசங்கிக்க அனுமதிக்க மாட்டார்.** அவர்கள் **உபதேச குழப்பங்களால்** தன் சபை மக்களை குழப்பிவிடுவார்களோ என்ற பயம்.

ஆந்திரா ஊழியரான **Dr. சதீஸ்குமாரைப்பற்றி** ஏன் இங்கு குறிப்பிட்டேன் என்றால் யானைக்கும் அடி சருக்கும் என்ற பழமொழிபோல் **பண மிகுதி** சில வருடங்களுக்கு முன் அவரை எப்படி மாற்றியதோ அந்த நிலை மற்ற பணக்கார **ஸ்டார் ஊழியர்களுக்கு** வந்துவிடக்கூடாது என்பதற்காக எழுதினேன். பண ஆசை எல்லா தீமைக்கும் காரணம் என்று 1 தீமோ. 6:10ல் எழுதியிருக்கிறது. பணம் பிரச்சனையல்ல, பணத்தின்மேல் உள்ள ஆசை. கர்த்தர் பணக்காரர்களை வெருக்கவில்லை. **ஆபிரகாம்** மிகப்பெரிய பணக்காரன். ஆனால் அந்த பணம் அவனை கெடுக்கவில்லை. நீதிமானாக வாழ்ந்ததால்தான் கர்த்தர் அவனை நேசித்தார். லூக் 8:3 **தங்கள் ஆஸ்திகளால்** ஊழியம் செய்த அனேக ஸ்திரீகள் இயேசு கிறிஸ்துவுடன் கூட இருந்தார்கள். **அவர்கள் பணம்** ஊழியத்துக்கு மிகவும் உதவியாக இருந்தது. ஆகவே பணக்காரனாக வாழ்வது பிரச்சனையல்ல, **அந்த பணத்தை எப்படி கையாளுகிறார்கள்,** எப்படி உபயோகிக்கிறார்கள் என்பதைத்தான் கர்த்தர் கவனிக்கிறார்.

இப்போது **இயேசு அழைக்கிறார்** பால் தினகரன் **மகள் திருமணத்தை** கவனியுங்கள் எத்தனை ஆடம்பரம். அதுமட்டுமல்ல திருமணம் முடித்து **பெண்ணும்**



**மாப்பிள்ளையும்** ஜனங்கள் மத்தியில் தனி பாதையில் வரும்போது இருபுறமும் அமர்ந்திருக்கும் எல்லாருக்கும் கைகளை அசைத்துக்கொண்டே வருகிறார்கள். திடீரென்று **மாப்பிள்ளை** பெண்ணை வயிற்றில் **கட்டிப்படித்து** அவளை ஒரு **சுற்று சுற்றினார்** பாருங்கள். அவள் **சிறித்துக்கொண்டே தன் கால்களை** உயரே தூக்கிப்கொண்டாள். உள் ஆடைகளை மக்கள் பார்க்க, கால்களையும் தொடையையும் மக்கள் யாவரும் பார்க்க இரண்டு முறை தூக்கி சுற்றினார். அது எத்தனை ஆபாசம். இரண்டு முறை அப்படி செய்தார்கள். சினி நடிகைகளை கதா நாயகன் தூக்கி சுற்றுவதைப்போல இவர்களும் அப்படியே செய்தார்கள். இதுவா கிறிஸ்தவ ஊழியக்காரன், ஊழியக்காரிகளின் திருமண நிகழ்ச்சி.

என் 84 வயதில் எந்த கிறிஸ்தவர்களின் திருமணத்திலும் இப்படிப்பட்ட ஆபாச செயலை நான் கண்டதில்லை. பண திமிர், தெய்வ பயமற்ற நிலையில் அவர்களை அப்படி செய்ய தூண்டியது. இத்தனைக்கும் பால் தினகரனும், மனைவியும், மகனின் மலையாள மனைவியும், தாய் **ஸ்டெல்லா தினகரனும்** அவர்களை பார்த்துக்கொண்டு ரசித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் யாவரும் மணமக்களை தடுக்கவில்லையே ! கர்த்தருடைய பிள்ளைகள் **வசதியாக** வாழ்வதில் தவறில்லை. ஆனால் **ஆடம்பரமாக** வாழக்கூடாது.


**சுகபோகமாய் வாழ்கிறவள்,** உயிரோடே செத்தவள். ஆங்கிலத்தில் Liveth pleasure என்று மொழிபெயர்த்துள்ளார்கள். ஒருவேளை தினகரன் பிள்ளைகள் வெளிநாட்டில் படித்தவர்கள், அந்த கலாச்சாரத்தின்படி அப்படி பொதுமக்கள்முன் **உள் ஆடைகள்** தெரிய கூட்டத்தில் இரண்டு சுற்றுகள் சுற்றி காண்பித்தார்கள் என்று கூற வழியில்லை. பெண்ணும் மாப்பிள்ளையும் இந்தியாவில் பிறந்து வளர்ந்து இந்திய கலாச்சாரத்தில் பழகி படித்தவர்கள். எப்படியோ நடந்தது நடந்து முடிந்துவிட்டது. பணக்கார ஊழியர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்.

இப்படிப்பட்ட திருமணத்தை அது ஊழியக்காரரின் குடும்ப திருமணமாக இருந்தாலும், சாட்சியற்ற இந்த திருமணத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாரா? தேவ பிரசன்னம் அந்த திருமணத்தில் இறங்கியிருக்குமா? அந்த திருமண பிள்ளைகளை கர்த்தர் ஆசீர்வதிப்பாரா? இதோடு என்ஆசிரிய குறிப்பை முடிக்கிறேன்.

☐ நீங்கள் அறிவித்த, எழுதிய எல்லா ஜெப குறிப்புகளுக்காகவும் ஜெபித்தேன். காணிக்கை அனுப்பியவர்களுக்காகவும் ஜெபித்தேன். தொடர்ந்தும் ஜெபிப்பேன்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்

- டாக்டர் **புஷ்பராஜ்**



# BYM

## சகோ. R. ஸ்டான்லி அவர்களின்

**கேள்வி : முழுநேரக் கிறிஸ்தவ பணிக்கு அழைப்பு கட்டாயம் தேவையா ?**

**பதில் :** திட்டவட்டமாய் அழைக்கப்பட்டாலொழிய ஒருவரும் முழு நேரக் கிறிஸ்தவப் பணிக்குள் நுழையக்கூடாதென்பது பெருவாரியான கிறிஸ்தவர்களின் கருத்து. மற்றவர்களோ அது ஒவ்வொருவருடைய தெரிந்தெடுப்பைப் பொறுத்தது எனக் கருதுகின்றனர். இதைக் குறித்த குழப்பமே அறுவடைப்பணியில் போதுமான ஊழியர் இறங்காததற்கு அடிப்படை காரணங்களில் ஒன்றாகும். இதைக் குறித்து திருமறை கூறுவதென்ன ?

தெளிவான அழைப்பை வலியுறுத்த அடிக்கடி பயன்படுத்தப்படும் திருவசனம் எபி. 5:4, **ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்திற்குத் தானாய் ஏற்படுகிறதில்லை,** இங்கு இரு முக்கிய காரியங்களை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. முதலாவது இங்கு சொல்லப்படுவது பொதுவான ஆசாரியத்துவப் பணியைப் பற்றியல்ல. **பிரதான ஆசாரியனாய்** சிறப்பான பொறுப்பிற்கு **நியமிக்கப்படுவதை குறிக்கிறது.** (வச.1) இரண்டாவது புதிய உடன்படிக்கையின் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டு விட்டது. நமது அண்ணன் இயேசு **ஆரோனின் வரிசையிலல்ல, மெல்கிசெதேக்கின் வரிசையில்** வந்துள்ளார். (எபி. 7:11-13) அவர் **யூதா கோத்திரத்தில்** தோன்றினார். அந்தக் கோத்திரத்தாரை குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை (வச 14) எனவே நமது கேள்விக்கு பதிலளிக்க எபிரேயர் 5:4ஐ மேற்கோள் காட்டுவது பொறுத்தமல்ல.

**மோசே** அல்லது **பவுலைப்** போல விவரிக்கக்கூடிய வகையில் அழைக்கப்பட வேண்டுமென்று நீங்கள் காத்திருந்தால் ஏமாந்து போவீர்கள் இவர்களைப் போன்றோர் யூதச் சமுதாயத்திற்கும் கிறிஸ்தவச் சபைக்கும் அடித்தளமிடும் காலங்களில் முக்கிய பங்கு வகிக்க அழைக்கப்பட்டவர்கள் சபை சரித்திரத்தில் இன்றைய நாள் பதினோராம் மணி வேளையாகும். ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்று சாக்குச்சொல்லி நிற்போரை நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன? என அறுப்பின் ஆண்டவர் கடிந்துகொள்வார். (மத். 2-:1-7) அழைப்பு வருமென்று காத்துக்கொண்டு அவர்கள் கடைத்தெருவில் நின்றுகொண்டிருந்திருக்கக்கூடாது. மாறாக அவர்கள் திராட்சத் தோட்டத்திற்கு சென்று வேலைக்குத் தாங்கள் தேவைப்படுவோமாவென கேட்டிருக்க வேண்டும். உலக வேலைகளைப்

தேடும்போது ஒரு படி தவறாது ஏறி இறங்கி எந்த வாசல் திறக்கிறதோ அதைக் கர்த்தரின் சித்தமென எடுத்துக்கொள்கிறோமல்லவா? **அதே தத்துவத்தைக் கர்த்தரின் பணியில் இறங்கவும்** பயன்படுத்தக்கூடாதோ? கிறிஸ்தவர்களில் பலர் வேலையில்லாமல் அல்லது தங்கள் படிப்பிற்கும் பயிற்சிக்கும் குறைந்த வேலையில் இருக்கிறார்கள். ஆனாலும் போதுமான வேலையாட்களிலில்லாத இறை ஊழியத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை (மத்.9:37)

அண்டவரே, **என்னை அழையும்** என்று ஜெபிக்காதீர்கள், **என்னை அனுப்பும்** என்று ஜெபியுங்கள் (மத். 9:38) ஏசாயாவைப் பார்த்து, ஆண்டவர், **உன்னை நான் அனுப்பட்டுமா?** நீ நமது காரியமாய் **போவாயா?** என்று கேட்கவில்லை. மாறாக அவர் **யாரை நான் அனுப்புவேன்?** யார் நமது **காரியமாய் போவான்?** என்றார். (ஏசா 6:8) **பொதுவான அழைப்பிற்கு** ஏசாயா **தனிப்பட்ட பதில்** கொடுத்து முன்வந்தான். **இதோ அடியேன்** இருக்கிறேன். **என்னை அனுப்பும்!** அதற்குப் பின்னர்தான் ஆண்டவர் அவனைப் பார்த்து **நீ போ,** என்றார் (வச 9) நாம் போக தன்னார்வமாய் முன்வரும்போதுதான் ஆண்டவர் நம்மை அனுப்புவார்.

அழைக்கப்பட்டோர் அனேகர், தெரிந்துகொள்ளப்பட்டவரோ சிலர். சுவிசேஷத்தில் இருமுறை இவ்வாசகத்தை இயேசு மொழிந்தார். ஒன்று **திராட்சத் தோட்ட** உவமையில், அடுத்தது **கலியாண விருந்து** உவமையில் (மத். 20:16, 22:14) இவ்விரு உவமைகளும் தேவ அழைப்பிற்கு சரியாய்ப் பதில்கொடுக்கவேண்டிய மனிதனின் பொறுப்பை வலியுறுத்துகின்றன. வேறு வார்த்தைகளில் சொன்னால் அழைப்பிற்குக் கீழ்ப்படிவோரே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாம்.

தங்கள் பிள்ளைகளை ஆண்வரின் திருப்பணிக்கு அர்ப்பணிக்கும் பெற்றோரின் விருப்பங்களையும் அவர் கனம் பண்ணுகிறார். தனக்கொரு மகனைக் கர்த்தர் கொடுப்பாரானால் அவனை அவரது பணிக்கே கொடுத்துவிடுவதாக அன்னாள் தானாகவே வாக்கு கொடுத்தாள். அவளது இதய வாஞ்சையைக் கர்த்தர் அருளிச்செய்தார். அவள் தனது வாக்கை காப்பாற்றினாள். **அதற்குப் பல ஆண்டுகள் கழித்துதான்** கர்த்தர் நேரடியாக **சாமுவேலை அழைத்தார்**. (1 சாமு 1:11,27,28 3:8,9) மிகச் சிறிய வயதிலிருந்தே இந்நாட்களில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை டாக்டராக அல்லது எஞ்ஜினியராக வேண்டும் என்று ஊக்குவிப்பது, அப்படியே ஆக்கிவிட தேவையான அத்தனையும் செய்யும்போது அதே விதமாய்க் கர்த்தரின் பணிக்கும் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தாதது ஏனோ?

நான் முழு பணிக்குள் இறங்குவதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே தனது முதற்பேறான என்னை எனது அம்மா ஆண்டவரின் பணிக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். நான் பொறியியல் துறையில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தாலும் எனது தருணம், தாலந்து, தனம் அத்தனையும் மிஷனரி பணியில் வார்த்துவிடவேண்டுமென்ற வாஞ்சை எனக்குள்

வளர்ந்துகொண்டேயிருந்தது. இவ்வித விருப்பத்தை எனக்குள் உண்டாக்கியவர் தேவனே என நான் புரிந்துக்கொண்டேன். (பிலி 2:13) **நான் சத்தம் ஒன்றும் கேட்கவில்லை,** தரிசனம் ஒன்றும் **காணவில்லை.** எனக்குக் கிடைத்தது எளிமையான வழிநடத்துதல் மட்டுமே. **எனது தீர்மானத்தை என் மனைவியோடு** பகிர்ந்துகொண்டபோது அவள் மனமகிழ்ந்தாள். என் அம்மா என்னைக் கண்ணீரோடு என்னை அழைத்துக்கொண்டார்கள். கர்த்தர் சித்தம் ஆகட்டும் என்றனர் எனது மாமனார் மாமியார். கணவன் முழுநேரப் பணிக்குள் காலேடுத்து வைக்கையில் மனைவியும் அவனோடு செல்வதே பொதுவான சூழலில் விரும்பத்தக்கது. ஆபிரகாமின் அழைப்பே சாராளுக்கும் போதும். (ஆதி 12:5)

நான் அழைக்காதிருக்க நீ ஏன் வந்தாய்? என்று கடவுள் யாரையும் கேட்டதாய் நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. மாறாக தான் அழைத்தபோது நீ ஏன் வரவில்லை? என்று ஆண்டவர் வினவக்கூடிய கிறிஸ்தவர்கள்தான் ஏராளம், ஏராளம். கீழ்ப்படியாதவரே கீழ்படிகிறவர்களைவிட அதிகம்!

***எல்லாரிடமும் ஆலோசனை கேட்டுக்கொண்டிருப்பதும் நன்றன்று. சில வேளைகளில் மூத்தவர்களும் தீர்க்கதரிசிகளுங்கூட உங்களை வழி பிசகக் செய்ய முடியும். ( 1 இரா 13, கலா 1:16, அப், 21: 8-14) தீர்மாணங்கள் எடுப்பது எப்படி? மற்றும் திருசித்தம் செய்யத் தவறுவதேன்?***

என்னைத் தவறாய்ப் புரிந்துகொள்ளவேண்டாம். தமது பிள்ளைகள் யாவரும் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு முழுநேர ஊழியத்திறகு வந்துவிட தேவன் எதிர்பார்க்கிறாரென்று நான் சொல்லவில்லை. நான் சொல்வது என்னவென்றால் தேவை மிகுதி , காலம் கொஞ்சம் தெரிந்தெடுப்பு உங்களுடையது. முதல் அடி எடுத்து வையுங்கள், புறப்படுங்கள். நீங்கள் இடதுபுறம் அல்லது வலதுபுறம் சாய்ந்தால் கடவுள் பின்னிருந்து சத்தம் கொடுத்து உங்களை நேர்வழியில் நடத்துவார் (ஏசா 30:21)

## இறையியல் கல்லூரிப்படிப்பு ஊழியத்துக்கு கட்டாயமா?

இளைஞன் இயேசு **போதகர்களிடம்** கேட்டறிந்து கற்றுக்கொண்டார் (லூக் 2:46) வாலிபன் **சவுல்** அந்நாட்களில் பெயர்பெற்ற போதனாகிய **கமாலியேலின்** பாதத்தில் உட்கார்ந்து **பழைய ஏற்பட்டைக் கற்றுக்கொண்டான்** (அப் 22:3, 5:34) பரிசுத்தவான்களுக்கு பக்தி விருத்தியளித்து, அவர்களை ஊழியத்திற்காய்ப் பயிற்றுவித்துப் பக்குவப்படுத்தும்படி தேவன் சபையில் போதகர்களை ஏற்படுத்தியுள்ளார். (எபே 4:11-13) எனவே **போதித்தல்** என்பது **தேவனால் நியமிக்கப்பட்டதாகும்.** கிரமமாக வேதத்தைக் கற்பது அனைத்து **விசுவாசிகளுக்கும்,** குறிப்பாக **முழுநேரப் பணியை** மேற்கொள்ளுவோருக்கும் இன்றியமையாததாகும். **வசனத்தை** சரியாய் **பகுத்து போதிக்க** பயிற்சி பெறாத **பிரசங்கிமாரால் பிரசங்க பீடங்கள்** இன்று பாழக்கப்பட்டுள்ளன (2 தீமோ 2:15) வேதத்தை

எதிர்போரல்ல **அதை எடுத்துரைப்போர் கரங்களிலேயே** அது கடும்பாடு படுகிறது என்றார் ஒருவர்.

நாணயத்தின் **மறுபக்கமும் கவலைக்குரியதுதான்.** இதவாதிகளும் **நவீனவாதிகளும்** எப்படியோ **பெரும்பாலான நமது இறையியல் கல்லூரிகளில் ஆசிரியராகப் புகுந்துவிட்டனர். மறுபிறப்பின் அனுபவம் கூட இல்லாத பேராசிரியர்கள்** இருக்கிறார்களென்பதைக் கற்பனை செய்தும் பார்க்க முடிகிறதா ? அனுபமில்லாத அறிவு ! வேதாகமக் காலங்களிலுள்ள போதகர்களோ அப்படியல்ல . போதகனாகிய **சாமுவேல்** ஜெப ஆவியில் திளைத்திருந்தவன் (1சாமு 12:33) மக்களுக்குப் **போதிப்பதற்காக எஸ்றா** தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான். (எஸ்றா 7:10) அந்தியோகியாவில் **போதகராயிருந்த பவுல். பர்னபா,** மற்றும் மூவரும் **உபவாச ஜெபத்தில்** ஊறியிருந்தனர், (அப். 13:1,2) மனித அறிவினால்ல, **ஆவியானவரின் அருளாலேயே** அப்போஸ்தலர் போதித்தனர். ( 1 கொரி 2:13) **போதிக்கிறவர்கள்** முதலாவது **அதின்படி செய்கிறவர்களாயிருக்கவேண்டுமென்று** இயேசு வலியுறுத்தினர். (மத். 5:19) **ஊருக்கு மட்டும் உபதேசம்** பண்ணுவோரைப் **பவுல் கண்டித்தான்** ( ரோ.2:21)

**இறையியல் கல்லூரியில்** நுழைந்தபின் வாலிபர் பலர் **ஆதி தரிசனம், விசுவாசம், வேகம் பக்தி வைராக்கியம்** ஆகியவற்றை **இழந்து தரித்திரராகின்றனர்.** அவர்களில் சிலரை நானறிவேன். இந்தியாவில் எழுப்புதலிலும் நற்செய்திப்பணியிலும் தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்படுவோரில் **வெகு சிலரே இறையியில் வல்லுநர்கள்.** உலக அளவிலும் அப்படித்தான், **பில்லி கிரஹாம் இறையியல் பட்டம் படித்தவரல்ல,** தெரியுமா? இறையியல் ஆசிரியர் பலர் **அறிவாளிகள்,** ஆனால் **அனுபவசாலிகளல்ல.** தேவ சத்தம் கேட்டல், **உபவாசித்து ஜெபித்தல்**, வரங்களை **அப்பியாசித்தல்,** பிசாசுகளை துரத்துதல், இவையெல்லாம் எப்படியெனத் **தங்கள் மாணவருக்கு** அவர்களால் கற்றுக்கொடுக்க முடியாது. எங்கள் கல்லூரியில் இப்பொழுது **மிஷனரிப்பணி** எனும் பாடத்தில் **டாக்டர் பட்டம்** பெற்ற இரு ஆசிரியருண்டு. இருவருக்கும் **மிஷனரிப் பணியில் நேரடி அனுபவம் கிடையாது..** இப்படி நம் நாட்டில் **பெயர்பெற்ற இறையியல் கல்லூரி** ஒன்றின் கல்வி விபர அறிக்கையில் வாசித்தேன். பயமாயிருக்கிறது !

இவைகளையெல்லாம் நோக்குங்கால், ஒவ்வொருவரும் தங்கள் அழைப்புக்கேற்ற பயிற்சியை தாங்களாகவே ஜெபத்துடன் தெரிந்துகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக, **மிஷனரிப் பணிக்குக்** குறுகிய காலப் பயிற்சியொன்றில் **புதிய களங்களில் சபை நிறுவுவதற்கான** ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் **பொருத்தமாயிருக்கும்.** சில கல்லூரிகள். **இறையியல் மட்டுமல்ல.** கிறிஸ்தவக் **கலைத் தொடர்பு.** இசை. **ஆலோசகப்பணி,** நிர்வாகம், **வாலிபர் ஊழியம்** இன்னும் இதுபோன்றவற்றிக்கான

பயிற்சிகளும் அளிக்கின்றன. இவையெல்லாம் பயனுள்ளவை. கிரமமான பயிற்சியானது சரியாய்ச் சிந்திக்க வழிவகுக்கும். அருமையான பிரசங்கிகள், போதகர், மேய்ப்பரை உருவாக்கியுள்ள சில நல்ல **கல்லூரிகளுக்காகத்** தேவனைத் துதிப்போம்.

ஒழுங்கும், தானாப் படித்துக்கொள்ளும் திறனும் ஒருவருக்கிருந்தால் கடலளவு **உதவி நூல்கள்** இன்றுண்டு. ஊழியத்தில் நுழைந்த பின்னரும் **வாழ்நாள் முழுவதும்** கிரமமாய்ப் **படித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.**

## இன்றும் அப்போஸ்தலர் இருக்கிறார்களா?

இக்கோள்விக்கு **ஆம்** என்றும் அதே வேளையில் **இல்லை** என்றும் பதில் சொல்லவேண்டும். வேதத்தில் இருவகை அப்போஸ்தலரைக் குறித்து வாசிக்கிறோம். தமது பூவுலக ஊழியத்தின்போது இயேசு நேரடியாகத்தெரிந்தெடுத்து **அப்போஸ்தலர் எனப் பெயரிட்ட பன்னிரண்டு சீடர்** முதல் வகையினர் (லூக் 6:13) இக்குழுவினர் பொதுவாக பன்னிரிவர் என்றழைக்கப்பட்டனர். (மத். 26:20, யோ 20:24 1கொரி 15:5) இவர்கள் **இயேசுவை நெருக்கமாய் அறிந்திருந்தனர்.** மூன்றாண்டு காலத்தில் நடந்த முக்கிய சம்பவங்களை **நேரடியாகக் கண்டிருந்தனர். உயிர்தெழுந்த பின்னரும் கர்த்தர் இவர்களுக்கு பிரத்யேகமாய்த் தரிசனமானார்.** அப்போஸ்தலரான கிறிஸ்துவிடமிருந்து (எபி, 3:1) நிகரற்ற சிலாக்கியம் பெற்ற இக்குழு, சிறப்பான அதிகாரம் பெற்றது. இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களை நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்கள் என இயேசு இந்த பன்னிருவருக்கு வாக்களித்தார். (மத் 19:28) புதிய ஏற்பாட்டு சபையின் அடித்தள ஊழியர் என்ற வகையில் இப்பன்னிரு அப்போஸ்தலர்களின் பெயர்கள் புதிய எருசலேமின் பன்னிரு அடித்தள கற்கள் மீது எழுதப்பட்டிருக்கும். (எபே. 2:20, வெளி 21:14) யூதாஸ் தற்கொலை செய்துகொண்டபோது, துவக்க முதல் இயேசுவின் ஊழியத்தை நேரடியாகக் கண்டிருந்த மத்தியாஸ் என்பவனுக்கு அந்த அப்போஸ்தல பட்டம் கிடைத்து. (அப். 1:16-26) இவ்விதம் இப்பன்னிருவருக்குப் பிரத்யேகமான ஒரு நிலை கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு ஊழிய வாரிசு கிடையாது. இவ்வகை அப்போஸ்தலரோடு வேறு எவரையும் திருமறை சேர்த்துக் கூறுவதாக தெரியவில்லை.

ஆனாலும் தேவன் **பவுலைச் சிறப்பாகப்** புறவினத்தாருக்கு ஓர் அப்போஸ்தலராகத் தெரிந்துகொண்டு **முழு அப்போஸ்தல அதிகாரத்தையும்** கொடுத்தார். அவனுக்குத் **திருச்சபையைக்** குறித்த வெளிப்பாடுகள் **வேறெவருக்கும் இல்லாத வகையில் கிடைத்தன.** தனது அழைப்பை குறித்துப் பெருமிதங்கொள்ள அல்லாது. **தனது ஊழியத்தை நிலைநிறுத்துவதற்காக** அடிக்கடி தன்னை இயேசுவின் **அழைப்பினால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலன்** என்று கூறிக்கொண்டான். (கல.1:1, 1 கொரி 9:1, கலா 1:10)

**பன்னிருவரில் ஒருவரல்லாத** மற்ற **அப்போஸ்தலரைக்** குறித்தும் புதிய ஏற்பாடு

கூறுகிறது. **பர்னபா** (அப். 14:14) **யாக்கோபு** (கலா 1:18,19, அப், 15) மற்றும் பெயர் சொல்லப்படாத பலர் (1 கொரி 15:7) இவ்வகையினர்

பரமேறிய கிறிஸ்து சபைக்கருளிய **ஐந்து வரங்களில் அப்போஸ்தலத்துவம் முதலாவதாகும்.** நாமனைவரும் கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி அடையும் வரை சபையில் **அப்போஸ்தலரது** ஊழியம் தேவை. (எபே. 4:10-13, 1 கொரி 12:28) இன்று அப்போஸ்தலர் கிடையாது என்று சொல்வோமானால், அதே வசன பட்டியலிலுள்ள **சுவிசேஷம்,** மேய்ப்பர், **போதகரெல்லாம்** இன்றும் உண்டென்று சொல்ல நமக்கு இடமில்லையே! வேதத்தின் எப்பகுதியையும் பாரபட்சமாய் வியாக்கியானிக்கக்கூடாது.

**அப்போஸ்தலன்** என்ற கிரேக்க சொல்லிற்கு **அனுப்பப்பட்டவன்** என்பதே பொருள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அப்பதத்திறக்கு **சிறப்புத் தூதுவர்** என்ற பொருளிருந்தது. அதே கிரேக்க சொல்லுக்கான **லத்தீன்** சொல்லில் இருந்தே **மிஷனரி** என்ற பதம் வருகிறது. இவ்விதம் அப்போஸ்தலர் என்பவர் கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சபைக்கு அடித்தளமிட முன்னோடித் தரிசனம் கொண்டு பலவிடங்களுக்கு செல்லும் சலன ஊழியராவார். (ரோ. 15:20,21, அப். 13:1-4) அப்போஸ்தல அழைப்புள்ளோரைப் பாடுபடவும் தியாகம் செய்யவும் அவர்களுக்கிருக்கும் ஆயத்தினாலும் ( 1 கொரி 4:9-13, 2 கொரி 4:7-12, 8:3-10 11:23-323, கலா 6:17) **தலைமைத்துவம்,** பயிற்றுவித்தல், **ஒழுங்கை நிலைநாட்டுதல்** ஆகியவற்றிற்கான ஆன்மீக அதிகாரத்தினாலும் ( 1 கொரி 4:21, 5:5, 2 கொரி 7:8,9, 2 தீமோ 2:1-3) அதோடு அவர்கள் ஊழியங்களில் காணப்படும் **அடையாளங்கள், அற்புதங்கள்** பலத்த **செயல்களினாலும்** (2 கொரி 12:12) அப்போஸ்தலரை **அடையாளங்கண்டுகொள்ளலாம்.** அதேவேளையில் எல்லாரையும் **பவுலின்** தரத்தைக்கொண்டே நாம் அளந்துகொண்டிருந்தால் நம் நடுவிலிருந்தே உருவாகிக்கொண்டிருக்கும் பல அப்போஸ்தலரை ஏற்றுக்கொள்ளாதுபோக நேரிடும்.

அப்போஸ்தலர் என தன் பெயருக்கு முன் பெயர் எழுதி ஒட்டுவதைவிட **செயல்படுத்துவதே** முக்கியம். இன்றும் நமக்கு அப்போஸ்தலர் இருப்பதால் தேவனைத் துதித்தோம். திருச்சபையானது தனது அழைப்பை நிறைவேற்றஅதற்குத் திசை காட்டுவதும் தரிசனம் தருவதும். அப்போஸ்தலரே - முடிவு நாட்களில் இருக்கும் நமக்கு இவர்கள் இன்னும் ஏராளம் தேவை.

## சுகமளிக்கும் கூட்டங்களைப்பற்றி கூறுங்கள் ?

சென்றவிடமெல்லாம் இயேசு சுவிசேஷத்தை பிரசங்கித்தார். நோயாளிகளை சுகமாக்கினார். (மத். 9:35) அவரது ஊழியத்தில் அற்புதங்கள் சாதாரணம், அவரது உபதேசத்தை கேட்கவும், தங்கள் வியாதிகளினின்று குணமாக்கப்படவுமே திரள்கள் அவரிடம் வந்தன. (லூக் 6:17) அவரை **மேசியா**வென நிரூபித்த அடையாளங்கள் இவையே (மத். 11:2-5) இயேசு பன்னிருவரை

**சுவிசேஷம் அறிவிக்கப்** பணித்தபோது **வியாதியுள்ளோரைக்** குணமாக்குங்கள் என்று தெளிவாய்க் கட்டளையிட்டார். (மத். 10:7,8) மாபெரும் கட்டளையிலும் **சுகமளிக்கும் ஊழியம்** சேர்ந்துள்ளது. (மாற் 16:15-18) ஆவியானவர் சபைக்களித்துள்ள **குணமாக்கும்** வரங்கள் இன்று கிறிஸ்துவின் குணமாக்கும் ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்றவே.

ஆனால் இன்று சுகமளிக்கும் கூட்டங்களில் பொதுவாகக் காணப்படும் சில காரியங்கள் நல்ல கிறிஸ்தவர்களைக்கூட **இவ்விதக் கூட்டங்களே வேண்டாம்** என்று புறக்கணிக்கச் செய்கின்றன. இது சரியல்ல. துர்ப்பிரயோகத்திற்குப் பதில் பிரயோகிக்காமலே இருப்பதல்ல. சரியான பிரயோகமாகும்.

**சுகமளிக்கும் ஊழியங்களில்** கர்த்தரின் நாமத்திற்கு **மகிமையை விட** அவதூற்றைக் கொண்டுவரும் **சிலவற்றை** இங்கு குறிப்பிடுகிறேன். மக்கள் **கவனமெல்லாம்** சுவிசேஷகன் மீதே ஈர்க்கப்படுவதால் அவர்களுக்கு **கதாநாயக** வணக்கம் சாதாரணம். அறிந்தோ அறியாமலோ ஆத்தும இரட்சிப்பைவிட **சரீர சுகம்** முக்கியத்துவம் பெற்றுவிடுகிறது. **வேதப்பாணியில் ஒத்துக்கொள்ளமுடியாத** சில காரியங்களை இப்படிப்பட்ட சுகமளிக்கும் சுவிசேஷகர் சொல்லிவிடுகிறார். எடுத்துக்காட்டு **இன்று இடுப்புக்குகீழ்** சுகவீனமுள்ளவர்களைத் தேவன் சுகமாக்கப்போகிறார், **நாளை இடுப்புக்குமேல் !** சுகத்திற்காக, ஜெபிக்கும் வேளைகளில் **புகைப்பட தந்திரங்கள்** சரளம். இவர்களின் பத்திரிகைகளில் **மிகைப்படுத்தி அறிக்கைகள் துணிந்து** வெளியிடப்படுகின்றன. **ராஜ தந்திர** முறையில் இப்படிப்பட்ட சுகமளிக்கும் கூட்டங்களில் **பணம் கேட்கப்படும்,** சிறப்புக் காணிக்கைகளுக்கு **சிறப்பு ஜெபம். பணக்கணக்கு விபரமெல்லாம்** பெரும்பாலும் கிடையாது. **மேடை பகட்டுக்கு அவளவிருக்காது.** இவ்வித் காரியங்கள் **நாசரேத்தின் தச்சுப் பிரசங்கியாருக்குப்** பொருத்துமோ?

கிறிஸ்தவர்களுக்கான சுகமளிக்கும் ஊழியம் **உள்ளூர்ச் சபைச் சூழலிலேயே பெரும்பாலும் இருக்கவேண்டும்.** (யாக் 5:14) குணமாக்கும் வரம் பெற்ற ஊழியர் **தனிக்காட்டு இராஜாக்களாயிராது** சபையின் பிற தலைவர்களோடு **பாதுகாப்புக்கும், கணக்கொப்புவிக்கும் இணைப்பு** வைத்துக்கொள்ளவேண்டும். (அப். 8:12-17) இப்படிச் செய்தால் சபை வளரும், சபை கூட்டப்படும், **சொந்த சாம்ராஜ்யங்கள் கட்டப்படாது.**

## ஜெப ஊர்வலம் பற்றி ?

மன்றாட்டு ஜெபம் மற்றும் ஆன்மீகப் போராட்டம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியோடு பட்டணங்களிலும் நகரங்களிலுமுள்ள **தெருக்களைச்சுற்றி** அணிவகுத்து **நடந்து ஜெபித்துவரும்** புது பழக்கமும் தோன்றியுள்ளது. இது **ஜெபப் பவனி** அல்லது **ஜெப ஊர்வலம்** (Prayer Walk) எனப்படுகிறது. அநேக விசுவாசிகளுக்கு இது

கவர்ச்சியாயிருந்தாலும் இது **வேதத்திற்கு அவ்வளவு உகந்தாயிராததால்** மற்ற சிலருக்குக் கேள்வியாயிருக்கிறது. இந்த **ஜெப ஊர்வலங்கள்** கூடிக்கொண்டே வருவதால், வேதாகமக் கண்ணோட்டத்தில் அவற்றை அலசிப்பார்ப்பது அவசியமாகியுள்ளது.

இயேசுவை பொறுத்தவரை **ஜெபமானது பிரதானமாக மறைவிலேயே செய்யப்படவேண்டியதென்பது** முதலாவது சுட்டிக்காட்டப்பட வேண்டும். அவரது காலத்து மார்க்கவாதிகள் சிலர் **வீதிகளின் சந்திகளில்** வேண்டுமென்றே நின்று ஜெபிக்கும் பழக்கத்தை கொண்டிருந்தனர். இயேசு அவர்களை **வன்மையாய் கண்டித்தார்.** நீ ஜெபம் பண்ணும்போது **உன் அறை** வீட்டுக்குள் நுழைந்து உன் **கதவைப்பூட்டி மறைவாயிருக்கிற** உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு, அப்பொழுது மறைவிலுள்ளதைப் பார்க்கும் உன் பிதா **வெளிப்படையாய்** உனக்குப் பலனளிப்பார். என இயேசு போதித்தார். (மத் 6:5,6) **இரகசிய ஜெபமே** ஜெபத்தின் இரகசியம் என்பதே இயேசுவின் கோட்பாடு. **பொதுவிடங்களில்** அவர் ஜெபித்தாய் நாம் வாசிப்பதரிது. மாறாக இப்புனிதப் பயிற்சிக்காய்த் **தனிமையான இடங்களைத் தேடி சென்றார்.** நோயாளிகளுக்காகக்கூட அவர் ஒருபோதும் **பொது விடங்களில் ஜெபித்தாய்த் தெரியவில்லை.** அவர்களைக் குணமாக்கினார் அவ்வளவுதான்.

சிற்றூர்களையும், பெருநகர்களையும் நற்செய்தி மயமாக்க இயேசு எழுபது சீடரை அனுப்பியபோது, நான் உங்களுக்கு இருளில் சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள். காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின் மேலிருந்து பறைசாற்றுங்கள். என்றார்.(மத் 10:27) அதாவது **ஜெபமானது மறைவிடங்களில் ஏறெடுக்கப்பட வேண்டும்** அதைத் தொடர்ந்து **வெளியிடங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்.** எதிர்ப்பு நிறைந்த பகுதிகளிலும் இம்முறையையே பின்பற்றவேண்டுமென்பது இயேசுவின் போதனை. (வச 28) **நகர்களை சுற்றி ஜெப ஊர்வலம் வந்ததாக** அப்போஸ்தலர் நடபடிகளில் எங்கும் நாம் வாசிப்பதில்லை. **அத்தேனே நகரானது** விக்கிரகங்களால் நிறைந்திருந்ததைக் கண்ட பவுலின் ஆவி **சினமடைந்தது.** உடனே அவன் விக்கிரகாராதனையின் அவிக்கெதிராய்ப் போராட **ஜெப ஊர்வலமொன்றை நடத்தவில்லை.** மாறாக சந்தைவெளிகளில் தினமும் மக்களோடு தர்க்கித்து பேசினான். (அப் 17:16,17) **பேதுரு** சிறையிலடைக்கப்பட்டபோது, விசுவாசிகளெல்லாரும் அணிவகுத்து **அல்லேலூயா கோஷமிட்டுக்கொண்டு** சிறை மதில்களைச்சுற்றி **ஜெபப் பவணி வரவில்லை.** அவர்கள் **கதவுகளை** பூட்டிக்கொண்டு வீடுகளுக்குள்ளிலிருந்து ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். **ஆண்டவர் அற்புதமாய் பேதுருவை விடுவித்தார்** (அப் 12:5.12,17)

ஜெப ஊர்வலத்திற்கு ஆதாரமாக அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் வேதச் சம்பவம் **இஸ்ரவேலர் ஏழு நாள் எரிகோ மதிலைச் சுற்றி வந்ததாகும்.** (யோசு 6) ஆனால் இச்சம்பவம் புதிய ஏற்பாட்டு யுகத்திலுள்ளோருக்கு **ஆன்மீகப் போராட்ட ஜெபத்தைப் போதிப்பதற்காய் எழுதப்படவில்லை.** மட்டுமல்ல அன்று அவர்கள் எரிகோ **நகரைச்**

**சுற்றிவந்தது அதை இரட்சிக்க அல்ல.** அதை **அழிக்க!** எபேசியருக்கு பவுல் எழுதிய நிரூபத்திலேயே இதற்குரிய முழுமையும் முடிவான உபதேசமுண்டு. அவன் எழுதியுள்ளபடி **பொல்லாத சக்திகளின் முக்கிய இருப்பிடம் வான மண்டலங்களில் இருக்கிறது.** (எபே.6:12) கிறிஸ்து எல்லாத் துரைதனத்திற்கும் அதிகாரத்திற்கும். வல்லமைக்கும், கர்த்தத்துவத்திற்கும்.. மேலாய் உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறார். (1:20,21) அவர் மீது விசுவாசம் வைத்திருக்கும் நாம் அவரோடு உன்னதங்களில் வீற்றிருக்கிறோம். (1:3) இப்படியிருக்க **போராட்டமானது சமதளத்தில்** அல்ல. மேலிருந்து **நாம் எதிரியைத்** தாக்குகிறோம். அமலேக்கியருக்கெதிராக தேவ மக்கள் போர்புரிந்த காட்சி இத்தத்துவத்தை தெளிவாய் விளக்குகிறது. **மலையுச்சியிலிருந்த** மோசேயும் ஆரோனும் **ஊரும் மன்றாட்டு வீரரைக் குறிக்கின்றனர்.** அமலேக்கியரோடு அடிவாரத்தில் போர் புரிந்த **யோசுவாவும்** இஸ்ரவேலரும் **நற்செய்தியறிவிப்பாளரைக்** குறிக்கின்றனர். (யாத். 17)

எருசலேமில் இயேசு **வெற்றிப் பவனி** வந்ததும் **ஜெப ஊர்வலத்திற்கு எடுத்துக்காட்டல்ல. ஓசன்னா** என்றால் ஆண்டவரே, எங்களை விடுவியும் என்று பொருள் ரோமரின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட **யூதரின் இதயக் கதறல் அது.**

**போதுமான அளவு நாம் இன்னும் சுவிசேஷத்தை** பிரசங்கிக்கவில்லை என்பதே எனது நம்பிக்கை. விதை விதைப்பதற்கு மாற்று எதுவும் கிடையாது. **ஜெபம் எவ்வளவுதான்** முக்கியமானதும் வல்லமையானதுமாயிருந்தாலும் **கிரமமாய் சோர்ந்துபோகாமல் நற்செய்தி யைப் பிரசங்கிப்பதற்கு** அது பதிலானதாகாது. பெருக விதைக்காமல் சிறுக விதைப்பதே அறுவடை குறைவாயிருப்பதற்கு காரணம். (2 கொரி 9:6) **ஜெப ஊர்வலங்கள் உற்சாகமாயிருக்கலாம்.** ஆனால் **அது வேலையை சாதிக்காது** அன்றைய இரட்சண்ய சேனையினர் போல **விசுவாசிகள் திறந்தவெளிப் பிரசங்கத்திற்காய்** தைமரியமாய்ப் புறப்பட்டு செல்லவேண்டும். **ஜெப ஊர்வலமல்ல,** சுவிசேஷப் பவனியே **இன்றைய தேவை,** உலகெங்கும் போய் **சுவிசேஷத்தை பிரசங்கம்** பண்ணுங்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். (மத். 16:15) **எந்த பட்டணத்தில் நுழைந்தாலும் பிரசங்கியுங்கள்** என்று மட்டும் கூறினார். ஜெப ஊர்வலம் நடத்த சொல்லவில்லை. அவர் (மத் 10:7, லூக் 10:8,9) எழுபது சீடர் பிரசங்கிக்கும்படி அனுப்பப்பட்டனர். **அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் சாத்தான் கீழே** விழுவதை இயேசு கண்டார் ! (லூக் 10:18)

தனி நபர்களாகவும், நாம் சமுதாயங்களுக்குள் ஊடுரிவிச் சென்று நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வோம். கிறிஸ்துவின் உபதேசத்தினால் பட்டணங்களை நிரப்புவோம், (அப்.5:28) நாடுகளிலும் கண்டங்களிலுள்ள யாவரும் சுவிசேஷத்தைக் கேட்டுவிடும்படி மாதக்கணக்கில் வருடக்கணக்கில் இடையறாது நற்செய்தியை அறிவித்துக்கொண்டேயிருப்போம். (அப் 19:10) வீடுகள்தோறும் சந்திப்பு ஊழியம் செய்ய விரைவோம். (அப் 20:20) இப்படி ஓர் இடம்விடாது

அறிவித்துக்கொண்டேயிருந்தால்தான் உலகத்தை கலக்குகிறவர்கள் எனும் பட்டப்பெயர் நமக்கு கிடைக்கும் (அப் 17:6) இது கடினமெனினும் இது ஒன்றே வழி வேறெதுவும் பகட்டாயிருக்கும், பரவசமாயிருக்கும், ஆனால் பயனளிக்காது.

**கால் மிதிக்கும் தேசமெல்லாம் கிடைக்குமென்பது** பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசிய வாக்குத்தமாகும். அது பூகோள சம்பந்தப்பட்டது. (உபா. 11:24, ஆதி 13:14,15) இந்த நற்செய்தி யுகத்தில் **இடங்களல்ல, இனங்களே** நமக்கு வாக்கு, மக்களிடம் செல்லும்போது , நாம் சந்திக்கும் யாவரும் நமது செய்தியை ஏற்றுக்கொண்டுவிடமாட்டார்கள். அப்படி வாக்குத்தத்தம் ஏதும் கிடையாது. விசாலமான வழிக்குப் பதிலாக நெருக்கமான வாசலை வெகு சிலரே தெரிந்துகொள்வர். **உலகைக் கிறிஸ்தவமயமாக்க அல்ல,** நற்செய்தி மயமாக்கவே **நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.** கிறிஸ்துவுக்கு **இந்தியா** என்பது வறட்டுச் கூச்சல் , இந்தியாவிற்கு கிறிஸ்து என்பதே அர்த்தமுள்ள செய்தி.

முடிவாக நான் சொல்வது ஜெப ஊர்வலங்கள் தேவையற்றவை, அந்த இடத்தில் ஜெபித்தாலும், அறையிலிருந்து ஜெபித்தாலும் ஒன்றுதான். நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 23:23) நமது இருதயங்கள் தேவனுடைய இருதயத்தோடு எவ்வளவு நெருங்கியிருக்கின்றன. அவரது பாரத்தை நாம் எவ்வளவு பகிர்ந்து கொள்கிறோம் என்பதே காரியம். (ரோ. 9:1-3) ஜெப **பவனிகள்** அல்லது ஜெப **ஊர்வலங்கள்** நடத்தச் செலவிடும் நேரத்தையும் பலத்தையும் தீவிர **நற்செய்தி அறிவிப்பு** முயற்சிகளில் செலவிட்டால் கிறிஸ்துவின் பேராணையை வெகு சீக்கிரம் நிறைவேற்றிவிடலாம்.

## ஊழியச் (ஸ்தாபனங்களை) சங்கங்களை வேதம் ஆமோதிக்கிறதா?

தேவன் தமது அனாதிக் கிருபை ஞானத்தின்படி,ஊழியச் (ஸ்தாபனங்களை) சங்கங்களை (Para Church Organisation) இவ்வுலகில் தமது திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்தி வருகிறார். ஆனால் இச்சங்கங்கள் சபை நடத்தும் **மேய்ப்பர்கள்** மற்றும் **சபைத் தலைவர்கள்** பலரது கண்ணை அரித்துக்கொண்டே இருக்கின்றன. இவ்வித ஊழியச் சங்கங்களுக்கு திருமறையில் அங்கீகாரம் உண்டாவெனத் திரும்பத் திரும்பக் கேட்டுப்படுகிறது. இருதிறத்தாலும் அவ்வப்பொழுது உட்கார்ந்து பேசி வருவதால் ஒருவரையொருவர் கூடுதல் புரிந்துகொள்ள வகையேற்பட்டாலும் இழுபறி இல்லாமலில்லை. கடினமான இக்காரியத்திற்குத் திருமறையிலிருந்து ஏதும் வெளிச்சமுண்டா? மிஷனரி இயக்கங்களுக்கான நாற்றங்கால் அப்போஸ்தலர் 13இல் உண்டென்பது எனது கருத்து. பரிசுத்த ஆவியானவர் பர்னபாவையும் பவுலையும் உள்ளூர் சபையொன்றி லிருந்துதான் வெளியே இன்னும் பரந்த ஊழியத்திற்காக அழைத்தார். தங்களது முதல் மிஷனரிப் பயணம் முடிந்ததும் **தங்களை அனுப்பிவைத்த சபைக்குத் திரும்பிவந்து** தேவனது செயல்களை அவர்கள் அறிக்கையிட்டனர். (14:26,27) ஆனால் அதற்கு பின்னர் பவுலோ அவனது சகாக்களோ எந்தவொரு குறிப்பிட்ட உள்ளூர்ச்

சபைக் கட்டுக்குள்ளிருந்து இயங்கியதாகத் தெரியவில்லை. அவர்களது ஊழியப் பணி ஒரு **மிஷனரி இயக்கப் பணியாய்** மாறிற்து.

ஊழியச் சங்கங்கள் பொதுவாக உள்ளூர் பணிக்கு மிஞ்சி வெளியுலகப் பணியில் ஈடுபடுபவை. சபை என்றவுடன் நாம் உள்ளூர்ச் சபை என்று மட்டும் எண்ணி நிறுத்திவிடக்கூடாது. திருச்சபையின் அனைத்துலகப் பரிமாணத்தை புரிந்துகொண்டால்தான் இறையரசில் ஊழியச் சங்கங்களின் இடம் நமக்குத் தெளிவாகும்.

வித்தியாசமான வரங்கள் மட்டுமல்ல, வித்தியாசமான செயல்பாடுகளும் உண்டு. ஆனால் ஒரே ஆவியானவர்தான் ஒரே கர்த்தர்தான் ஒரே தேவன்தான் (1 கொரி 12:4-6) கிறிஸ்தவ ஊழிய முதிர்ச்சிக்கு இவ்வறிவு அடிப்படையானது. நீ எனக்கு வேண்டியதில்லை. என்று யாரும் யாரிடமும் சொல்ல முடியாது. (வச. 21) ஒருவருக்கொருவர் போட்டியாக அல்ல. உதவியாக இருக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சபையைக் கட்டிடமாகவும், ஊழியச் சங்கங்களை கட்டிடத்திற்கான சாரமாகவும் நான் புரிந்துகொண்டிருக்கிறேன். **மிஷனரி இயக்கங்களின்** முடிவான பணி **சபை கட்டுதலாகும்.** சபையின் முக்கிய பணி **மிஷனரி ஊழியமாகும்.** சபை மேய்ப்பருக்கும் சபையினருக்கும் படிக்க வேத புத்தகம் வேண்டுமானால் அதற்கு வேதாகம மொழி பெயர்ப்பாளர்களும் வேதாகமச் சங்கங்களும் தேவை. **சபைகளின் சமூகச் சேவைகளில்** உதவ நிவாரப்பணி இயகக்கங்கள் தேவை. சபையிலுள்ள பல்வேறு பொறுப்புகளுக்கு நபர்களைப் பயிற்றுவிக்க **இறையியல் கல்லூரிகள்** தேவை. உள்ளூர் சபைகளின் சுற்றுப்புற நற்செய்திப் பணிகளில் சந்திக்கப்படாது தொலைவிடங்களில் மறைந்துள்ள மக்களையும் சந்திக்க மிஷனரி நிறுவனங்கள் தேவை. இப்படி எத்தனையோ எடுத்துக்காட்டுக்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். தாதிமார், எக்ஸ்ரே எடுப்போர், இரத்தம் சோதிப்போர் போன்ற Para Medical Staff டாக்டர்களுக்கு எவ்விதம் தேவையோ அப்படியே ஊழியச் சங்கங்கள் Para Medical Ministries உள்ளூர் சபைக்குத் தேவை , அவை உள்ளூர் சபைகளுக்கு பதிலானவை அல்ல. பக்கபலமானவை.

எல்லா வரமும் எங்களிடமுண்டென்று உள்ளூர் சபை எதுவும் பெருமையடித்துக் கொள்ளமுடியாது. பல்வேறு சபைகளிலுள்ள வரங்களைப் பொதுவான நிகழ்ச்சிக்காகவும் பரந்த ஊழியத்திற்காகவும் ஒருங்கிணைக்க ஊழியச் சங்கங்கள் உதவுகினறன. இப்படிச் செயல்பட்டால் , நமது சுற்றத்தை மட்டுமல்ல, சமுதாயத்தையே பாதிக்கலாம்.

ஆதிச்சபைக் காலத்தில் ஒரு ஊருக்கு ஒரு சபைதான் என்றிருந்தது. இன்றோ நிலைமை வேறு. ஏற்கனவே ஒரு ஊரில் பன்னிரெண்டு சபைகள் இருந்தாலும் ஒவ்வொரு சபைப் பிரிவும் தனது கிளைச் சபை ஒன்றையும் அங்கே நிறுவ முனைகிறது ! சபைகளுக்கிடையே ஒருமனத்தையும் ஐக்கியத்தையும் உண்டாக்கும் பொது மேடைகளாகவும் கூடும் மையங்களாகவும் ஊழியச் சங்கங்கள் விளங்குகின்றன. நமது பணத்தையும் பலத்தையும்

ஒன்றுசேர்க்கும்போது செய்ததையே திரும்பச் செய்யும் வீணடிப்பு தவிர்க்கப்படும்.ஊழிச் சங்கங்களைச் சரியாக சொன்னால் பொது சபை ஊழியங்களென்றே அழைக்கவேண்டும்! சபையின் ஒருமைப்பாட்டிற்கும் முதிர்ச்சிக்கும் இன்றியமையாதவையாக அவை தேவனது திட்டத்தில் இயங்குகின்றன.

சிலர் கிறிஸ்துவைப் பொறாமையினாலும் விரோதத்தினாலும் பிரசங்கித்தபோதுகூடச் சந்தோஷப்பட்டான் பவுல் (பிலி 1:15,16) இறையரசுக்கு இலாபம் கொண்டுவரும் எந்த ஊழியத்திற்காவும் தேவனைத் துதிப்போம். கூடாரத்திற்குள் நம்மோடு ஒருவன் இல்லையென்ற ஒரே காரணத்தினால் நாம் ஏன் அவன் தீர்க்கதரிசனம் சொல்லுதலைத் தடுக்கவேண்டும். யோசுவாவைப்போல குறுகிய மனப்பான்மையில்லாது மோசேயைப்போல பரந்த மனப்பான்மை கொள்வோம். (எண். 11:26-29) இயேசு இருந்த காலத்தில் அவரையும் அவரது சீடரையும் தவிர்த்து விடுதலை ஊழியம் நடத்தக்கூடிய வேறு யாரைக் கற்பனை செய்துபார்க்கமுடியும்? அப்படி இருக்க முடியுமென யோவானால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அந்த பிரசங்கியாரை அவன் தடுத்து நிறுத்தியே விட்டான் ! ஆனால் இயேசுவோ அவனைத் தடுக்கவேண்டாம். நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார். (மாற் 9:38-40)

சவுல் இராஜாவுக்கு இதோ ஒரு செய்தி, தாவீதை உனக்கு ஆபத்தாக நினைக்காதே. உனது யுத்தங்களில் அவன் உனக்கு ஆதரவாகத்தான் இருப்பான்!.

## நிறுவனங்களிலிருந்து ஊழியர்கள் விலகுவதேன் ?

நான் முதலில் X என்ற ஊழியத்தில் இருந்தேன், இப்போது .......... வேறு ஊழியத்தில் நேர்ந்திருக்கிறேன். இவ்விதம் சொல்லும் கிறிஸ்தவ ஊழியர் பலரை நாம் காண்கிறோம். இது மக்களுக்குக் குழப்பமாயுள்ளது. ஓர் எழுப்புதல் மற்றும் மிஷனரி இயக்கத்தில் முப்பத்து மூன்றாண்டுகள் தலைவனாயிருந்து, இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல்வேறு கிறிஸ்தவ நிறுவனங்களோடு தொடர்புள்ளவனாக இருப்பவரை வேதனையோடு கவனித்துக்கொண்டிருக்கிறேன். ஊழியங்களை விட்டு வந்தவர் பலரது கூற்றுக்களை அலசிப் பார்த்ததீர். அடிப்படையான காரணங்களை இங்கு வரிசைப்படுத்தியுள்ளேன். அவற்றில் பலவற்றிற்கு வேத எடுத்துக்காட்டுகள் ஒப்பாயிருக்கும். இச்சலனத்தை முழுவதும் நிறுத்த முடியாவிடினும் முடிந்த அளவு குறைக்க என்ன செய்யலாமென்றும் கண்டுபிடிக்க முயலுகிறன்.

■ முதலாவது தவிர்க்க முடியாத நியாயமான சில காரணங்களை காண்போம்.

☐ சிறப்பான வரங்களும் தாலந்துகளும் பெற்ற ஊழியருக்கு அந்த **நிறுவனங்களின் கட்டுப்பாடுகள்** தங்களைக் கட்டிவைப்பவைகளாய் தோன்றுகின்றன. தங்கள் வரங்களைப் பயன்படுத்த போதுமான வாய்ப்புகள் இல்லாததாய் உணருகின்றனர். அவர்களுக்கு மூச்சு முட்டுகிறது. இவ்விதச் சூழலிலும் கடவுள் மிகத் தெளிவாய் நடத்தாவிடில் ஓர் ஊழிய

நிறுவனத்தை விடுவது நல்லதல்ல. வெளியேறிவிடுபவர்களுக்கு இரண்டு ஆபத்துக்ள் உண்டு. ஒன்று கவனமான **கண்காணிப்பும்** உடனடியான **கணக்கொப்புவிப்பும்** இல்லாமற்போகிறது. அற்புத வரங்கள் உள்ள ஊழியர் பலர் ஊழிய அமைப்புகளைவிட்டு வெளியேறிச் சென்றபின் ஓரக்கொள்கைகளுக்கும் மிதமிஞ்சிய செயல்பாடுகளுக்கும் பலியாகியுள்ளனர். ஊழியத்தில் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவின் உடலுக்குப் பயன்படாது ஊழியனின் சொந்த விருப்பங்களையும், குடும்பங்களையும் திருப்திப்படுத்தவே சென்றுவிடுகிறது. அடுத்த ஆபத்து இவ்வித கயாதீன் ஊழியர் பெரும்பாலும் இறையரசையல்ல, **தங்கள் சொந்த சாம்ராஜ்யங்களையே** இயேசுவின் பெயரைச்சொல்லி **கட்டிக்கொண்டிருப்பார்கள்.** தேவனது சித்தத்தின்படியாய் ஊழியத்திலிருந்து விலகுபவர்களும் உண்டு. ஆனால் அவர்களைவிடச் சுயநலனுக்காய் வெளியேறுபவர்தான் அதிகம்.

சிறப்பான வரங்களும், தாலந்துகளும் பெற்ற உடன் ஊழியரை நிறுவனத்திலுள்ள மற்ற எல்லாரையும்போல் நடத்தாது. **சட்டதிட்டங்களைச் அவர்களுக்காக சற்றுத் தளர்த்திக்கொடுத்து,** அன்னார் தங்கள் வரங்களைப் பயன்படுத்தி தங்கள் அழைப்பை நிறைவேற்ற நல்ல வாய்ப்புகளை உருவாக்கித் தருவது **தலைவர்களின் தலையாய கடமையாகும்.** உடன் ஊழியர் ஒருவர் பயந்து பொறாமைப்பட்டுவிடக்கூடாது. **விதவைகளுக்கு** ஆகாரம் பரிமாறவே பிலிப்பு தெரிந்தெடுக்கபட்டான். ஆனால் அவனது **வரம் வெளிப்படுவது** காணப்பட்டபோது அவன் **தயக்கமின்றி சுவிசேஷகனாகிய பிலிப்பு** என்றழைக்கப்பட்டான். (அப். 6:5, 8:5,6, 21:8) ஆனால் **பிலிப்பு** தன்னைத்தானே **பிறருக்கு மேல் தன்னை முன்னுக்குக் கொண்டுவர முயற்சிக்கவில்லை.**

☐ நிர்வாகத்திலுள்ள **ஓட்டைகளாலும்** ஊழியர் பலர் நிறுவனங்களை விடுகிறார்கள். வேத சத்தியங்களைப் புரிந்துகொள்வதாலும் ஆன்மீக கிருபைகளாலும் தங்களது குணங்களைத் தலைவர்கள் கனிவாக்கிக்கொண்டிராவிடில் அவர்கள் தங்கள் உடன் ஊழியருக்கு அதிலும் குறிப்பாக இளைஞருக்கு பெரும் தடைகளாயிருப்பார்கள். எந்தவொரு அமைப்பும் அவர்கள் **சட்டதிட்டமும்** பூரணமானதல்ல. எனவே முன்னேற்றத்திற்கான மாற்றங்கள் வரவேற்கப்படவேண்டும். சாசனங்களும் சட்டதிட்டங்களும் நமக்காய்த்தான் இருக்கின்றனவே தவிர நாம் அவைகளுக்காய் இல்லை. (மாற் 2:27) தாமே எழுதியதையே கடவுள் மாற்றிவிட்டார் ! புதிய ரசத்திற்குப் புதிய துருத்திகள் தேவை. **தலைவர்கள்** அதிகாரத் தோரணைக்கு அடிமையாகி திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தால் நல் ஊழியர் பலரை இழக்க நேரிடும் (மத் 20:25,26)

☐ ஒரு சிலர் ஒரு குறிப்பிட்ட பாரத்துடன் கூடிவந்து ஓர் ஊழியத்தைத் தொடங்குவர். சில ஆண்டுகட்டுப்பின் அவர்களில் ஒருவர் தன்னைக் கர்த்தர் வேறுவித ஊழியத்திற்கு அழைப்பதாய் உணரலாம். உடனே அவர் அக்குழுவை விட்டுவிடாது மற்ற அங்கத்தினருடன் தனது பாரத்தைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். அவர்கள் இதைக் குறித்து ஜெபித்துப் பொருள் சார்ந்து

கலந்துரையாடவேண்டும். பொதுவான கருத்து இதற்கு ஒத்திருக்குமானால் அந்த நபரை மற்றவர்கள் ஆசீர்வதித்து அனுப்பி வைக்கவேண்டும். **உள்ளூரிலுள்ள** தீர்க்கதரிசன மற்றும் **போதக ஊழியத்தில்** இரு கண்கள் போன்ற **பவுலையும், பர்னபாவையும்** அனுப்பிவைப்பது கடினம்தான். ஆனால் சொந்த காரணங்கள் எத்தனை நியாயமாயிருந்தாலும் இறையரசின் தேவைகளே பிரதானமானவை (அப். 13:1-4) எல்லா வகை ஊழியங்களையும் ஒரே குடையின் கீழே வைத்துவிடவும் முடியாதே!

☐ சுகவீனம் மற்றும் **குடும்பச் சிக்கல்** காரணமாகவும் நிறுவனங்களிலிருந்து ஊழியர் வெளிவருவதுண்டு, சரியான நபர்களுக்கு விசுவாசிகள் ஆதரவு தரவேண்டும்.

☐ அடுத்து சில தவறான காரணங்களைச் கவணிப்போம்.

☐ **பண ஆசைக்குப்** பலியாகி **நிறுவனங்களை விடும்** ஊழியர் பலருண்டு. கூடுதல் பணத்தை இச்சித்துப் **பவுல்களை** விட்டோடும் தேவாத்மாக்கள் ஏராளம் (2 தீமோ 4:10, பிலி, 3:17-19) பொதுவாக, **சுயாதீன ஊழியர்** தாங்கள் ஆரம்ப காலத்தில் இருந்த **நிறுவனங்களில்** இருந்திருந்தால் அங்கு பெற்றிருக்கும் **ஊதியத்தைவிடக் கூடுதல் சம்பாதிக்கிறார்கள்.** இவர்கள் தங்கள் **பொருளாசையை விசுவாச ஊழியம் எனும் போர்வையில்** மூடிக்கொள்வார்கள் பொருளாதார தேவைகளைக் குறித்து இயேசு நாம் கூட்டாக விசுவாசிக்க வேண்டுமென்றே போதித்தார். **எங்களுக்கு** (எனக்கு அல்ல) **வேண்டிய ஆகாரத்தை** இன்று **எங்களுக்கு** (எனக்கு அல்ல) **தாரும்** என்று நாம் ஜெபிக்க வேண்டுமாம்!

☐ நபர்களுக்கிடையேயுள்ள மோதல்கள் கிறிஸ்தவ ஊழியங்களில் பெருகிவருவது வருந்தற்குரியது. ஆணவமுள்ள தலைவர்களோடு சமாளித்துப்போக முடியாத ஒரே காரணத்தால் எத்தனை ஊழியர் தங்கள் தாய் சங்கங்களைவிட்டு போக வேண்டியதாயிற்று! சில சமயங்களில் இவ்விதப் பிரச்னைகள் உடன் ஊழியரோடும் இருக்கலாம். ஆனாலும் விட்டுவிட்டு ஓடுவதுதான் பரிகாரம் என்று சொல்ல முடியாது. கடவுள் வேண்டுமென்றே நம்மைக் கடினமான சில நபர்களுடன் இருக்கச்செய்வார். இரும்பை இரும்பு கூர்மையாக்கும். (நீதி 27:17) நமது ஊழியத்தை வளர்க்கவேண்டுமென்பது நமது கரிசனை, ஆனால் நமது உள்ளத்தை உருவாக்க வேண்டுமென்பது நாதனது கவலை. கொடுமையாய் நடத்தப்பட்ட ஆகார் சாராயிடமிருந்து **தப்பியோடியபோது** கர்த்தருடைய தூதன் அவளைத் தடுத்து நிறுத்தி, **நீ உன் தலைவியிடம் திரும்பிப்போய் அவளது கையின் கீழ் அடங்கியிரு.** என்றான். ஆனால் சிறிது காலத்திற்குப்பின்னர் **கடவுள் தாமே** ஆபிரகாமை பார்த்து சாராயின் விருப்பப்படி ஆகாரை ஆனுப்பிவிட சொன்னார். (ஆதி 16:5-10, 21:-14) காலம் வரும் வரை காத்திருக்கத்தெரிந்தோர் பாக்கியவான்கள். எங்கெல்லாம் மனிதர் இருக்கின்றனரோ அங்கெல்லாம் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். குறைவுள்ள மனிதர் மற்றும் முறைகள் மூலமாகவே கடவுள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஒரு பிரச்னைக்குத் தப்ப இன்னொரு இடம்

ஓடுவது சட்டியிலிருந்து அடுப்பிற்குள் விழுந்த கதையாகிவிடும். சுயாதீன ஊழியமல்ல, ஒருவரையொருவர் சார்ந்த ஊழியமே வேதப் பாணியிலானது.

☐ ஒரு சில ஊழியர் **ஒழுங்கு நடவடிக்கைகளினால்** வெளியேஅனுப்பப்படுகின்றனர். இத்தகையோர் தாங்கள் அந்த நிறுவனத்தைவிட்டு வெளிவந்ததற்கு உண்மையற்ற வேறு காரணங்களை **மக்களுக்குச்** சொல்லுவார்கள். இவ்வித நபர்களையும் அவர்தம் குடும்பங்களையும், அவர்களது எதிர்கால ஊழியங்களையும் பாதுகாக்கும் நோக்கோடு **நிறுவனங்களும்** உண்மையான காரணங்களை வெளியே சொல்லுவதில்லை. ஒரு நிறுவனத்தைவிட்டு வந்தவர் அந்நிறுவனத்தைப்பற்றி சொல்லும் எல்லாவற்றையும் நம்பவேண்டாமென்பது நான் மக்களுக்கு கொடுக்கும் ஆலோசனை. நம்புவது இறையரசிற்கு பயனுமளிக்காது.

☐ இன்னொரு படுமோசமான காரணத்தை குறிப்பிட்டு முடிக்க விரும்புகிறேன். ஆடு திருடுவதைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்று **மேய்ப்பர்களைத் திருடுவதே** மிகச் சாதாரணம். அயல்நாட்டு நிறுவனங்கள் பல தங்கள் **டாலர்களைக்** காட்டி இந்திய ஊழியர் பலரைக் கவர்ந்துள்ளன. **வெள்ளைத் திமிங்கலங்கள்** இந்தியாவின் விருவிருப்பான ஆத்துமாதாய **மீனவர்களை** வேட்டையாடும் இடங்களாக அனைத்துலக மாநாடுகள் மாறிவிட்டன். பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் புதிய ஊழியங்களைத் தாங்கள் நிறுவுவதில்லையென்றும், **ஏற்கனவே அங்கு ஏராளமாய் இருக்கும் ஊழியங்களையே** தாங்குவோமென்று **மேலைநாட்டு நிறுவனங்கள்** தேவனுக்குமுன் உண்மையாய் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். மற்றபடி தேவன் வேதனைப்படுவார். **தலைவர்களுக்குக்** கர்த்தரின் கட்டளை **உன் அயலானுடைய** வேலைக்காரனை **இச்சியாதிருப்பாயாக !** மிஞ்சிய பணியை முடிக்க எஞ்சிய நேரம் மிகவும் கொஞ்சம். இந்தியாவைப் போன்றதொரு நாட்டில், இவை போன்றதான நாட்களில் இன்னும் பிரித்துக்கொண்டும். விலகிக்கொண்டும் இருக்க வேண்டும். செய்ததையே செய்துகொண்டும் இருக்க முடியாது. முடியவே முடியாது. அவர் பெருகட்டும். நான் சிறுகட்டும் என்பதே நமது கோட்பாடாயிருக்கட்டும்.


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

"நான் உங்கள் ஆத்துமாக்களுக்காய்
செலவு பண்ணவும் – செலவு பண்ணப்படவும்
விரும்புகிறேன்" II கொரி. 12:15

"நான் எனது சொந்த நலனை தேடாமல்
அனேகர் ஆசீர்வதிக்கும்படி
அவர்களது நலனை நாடுகிறேன்." I கொரி. 10:18

NOVEMBER - 2023

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

Annual Subscription:

| | |
|---|---|
| India | - Rs.60/ |
| Foreign | - Rs.600/ |

Return Requested:

Dr.PUSHPARAJ
SALEM - 636 005
INDIA.